***கொவிட் 19 வார பாடசாலை சபரகமுவ***

***நிவித்திகலை கல்விக் காரியாலயம்***

***பாடம் - விஞ்ஞானம் தரம் - 09 வாரம் - 01***

# ***சுயகற்றல் கையேடு - 03***

தலைப்பு - அலைத்தெறிப்பும் முறிவும்
ஒளி முறிவு

***இந்த ஆய்வின் முடிவில் நீங்கள்***

- ஒளி முறிவினை முன்வைப்பதற்கு செற்பாடுகளை செய்து காட்டுவர்.
- ஒளியானது ஒரு ஊடகத்தில் இருந்து இன்னுமொரு ஊடகத்திற்கு பயணம் செய்யும் போது அதன் பயணப்பாதையின் திசையில் ஏற்படும் மாற்றம் ஒளி முறிவு என கூறுவர்.
- ஒளி முறிவின் காரணமாக ஏற்படும் நிகழ்வுகளுக்கு உதாரணங்கள் சிலவற்றை வழங்குவர்.
- அரியத்தின் ஊடாக ஒளி பயணம் செய்யும் போது திருசியம் திரையில் தோன்றும் விதத்தை முன்வைப்பர்.
- சூரிய ஒளி ஏழு நிறங்களின் கலவை எனக் கூறுவர்.
- முதலில் தரம் ஒன்பது பாடநூலில் பகுதி II இல் உள்ள பக்கம் 75இல் செயற்பாடு 14.10ஐ செய்து, பக்கம் 76இல் உள்ள 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கு விடை தருக. ( லேசர் விளக்கினை பயன்படுத்தும் பெரியவர் ஒருவரின் ஆலோசனையை பெற்றுக் கொள்க)
- அதன் பிறகு பக்கம் 76இனை நனறாக வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    1. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒளிக்கதிரின் திசை எங்கு மாற்றமடையும்?
    2. இடை முகத்திற்குச் செங்குத்தாகப் படும் ஒளிக்கதிரின் திசை மாற்றத்திற்கு உள்ளாகுமா? இல்லையா?
    3. ஒளி முறிவு என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

- தற்போது 76 இல் உள்ள உரு 14.31 படத்தினை பிரதி செய்து ஒளிக்கதிர், படுப்புள்ளி, இடைமுகம், முற்கோணம், முற்கதிர் என்பவற்றை பெயரிடுக.

- தற்போது 77ம் பக்கத்தில் சொற்பாடு 14.11ஐ மேற்கொள்ளுங்கள்.
- 14.33 படத்தினை வரைந்து தகவல்களை குறித்துக் காட்டுக.
- தற்போது 78, 79 ஆம் பக்கங்களை நன்றாக வாசியுங்கள்.
- முதலில் செயற்பாடு 14.12 மெற்கொள்ளுங்கள்.
- உரு 14.34 இனை வரைந்து உண்மை ஆழம், தோற்ற ஆழம் தொடர்பாக சிந்தித்து பார்த்தல் அவசியம் என்பதனை முடிவு செய்க.
- உரு 14.35 இற்கு அமைவாக நீர்குவளையின் உள் பென்சில் ஒன்றினை சாய்வாக இட்டு பென்சில் தென்படும் விதத்தின் மூலம் அனுபவம் பெற்றுக் கொள்க.
- அதன் பிறகு செயற்பாடு 14.13 இனை மேற்கொள்ளுங்கள் அதனூடாக பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    1. நளுங்கள் முதலில் அனுப்பிய ஒளியின் நிறத’தை எழுதுக.
    2. அரியத்தினுள் முறிவடைந்த பிறகு திரையில் எத்தனை நிறங்களில் காணப்படும் அந்நிறங்களை எழுதிக் காட்டுக.
    3. நிறப் பிரிகை என்பதனை விளக்குக.

    ❖ பக்கம் 80 இனை வாசித்து

    1. வானவில் தோன்றும் முறையினைத் தருக?
    2. நியூற்றன் தட்டினை அமைப்பதற்கு முயற்சி செய்க.

- இயலுமானால் தரம் 11 பாடநூலில் பகுதி 1 இல் 116, 117, 118 ஆகிய பக்கங்களை வாசியுங்கள்.
- இயலுமானால் உங்கள் ஆசிரியரிடம் காணப்படும் தரம் 11 விஞ்ஞான SMART TEXT BOOK இன் வளர்ச்சி. மேற்படி பகுதி தொடர்பாக கேட்டறிக.